Sub-way near Shanthi Theatre.

*105Q.—THIRU WILSON APPOLLOS(on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a sub-way near Shanthi Theatre in Anna Salai ; and

(*b*) if so, when it will be constructed ?

சாந்தி திரைப்பட அரங்கு அருகில் சுரங்கப்பாதை

*திரு. வில்சன் அப்பொலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்ணா சாலையில் சாந்தி திரைப்பட அரங்கு அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் உத்தேசம் எதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அண்ணா சாலையில் அஞ்சல் அலுவலகமும் திரைப்பட அரங்குகளும் அமைந்துள்ள பகுதியில் சுரங்கப் பாதை அமைப்பது குறித்த வரைபடத் திட்டங்களும் மதிப்பீடுகளும் சென்னை பெரு நகர வளர்ச்சி அதிகார மன்றத்தைக் கலந்தாலோசித்து தலைமைப் பொறியாளரால் (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்) தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் எவ்வளவு உள்ளன? இன்னும் எத்தனை சுரங்கப் பாதைகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே இரண்டு இடங்களிலே சுரங்கப்பாதைகள் அமைத்திருக்கிறோம். மேற்கொண்டு இப்பொழுது இந்த சாந்தி திரை அரங்கத்திற்கு எதிரிலே ஒரு சுரங்கப் பாதை அமைக்கவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். இன்னும் பத்து இடங்களிலே இப்படி அமைக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். முழு விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இரண்டு இடங்களிலே சுரங்கப் பாதை இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டுக்கும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதைத் தெரிவிக்கவேண்டும். மேற்கொண்டு சாந்தி சுரங்கப்பாதை அமைப்பதற்கு என்ன திட்டம், எவ்வளவு செலவாகுமென்று உத்தேசித்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> ஏற்கெனவே அண்ணா சிலைக்கு அருகே அமைந்துள்ள சுரங்கப்பாதைக்கும், சென்டரல் ஸ்டேஷனுக்கு அருகிலே அமைக்கப்பட்டிருக்கும் சுரங்கப் பாதைக்கும் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. இதைப்பற்றித் தனியாக உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டால், பதில் தருகிறேன். சாந்தியின் பக்கத்தில் சுரங்கப்பாதை அமைப்பது பற்றித் திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு செலவாகும் என்ற மதிப்பீடு வரவில்லை. வந்தபிறகு தான் பரிசீலனை செய்யப்படும்.

THIRU A. R. DAMODARAN: Sir, will the Government consider the desirability of installing escalators in very busy areas like the Sub-way near the Central Station as in most metropolitan areas, instead of putting up a rigid structure like cement concrete sub-ways, since escalators are put up in many modern Cities ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> வளர்ந்துவருகின்ற எல்லா நகரங்களிலேயும் எஸ்கலேட்டர் போட்டிருக்கிறார்கள். அதைப்போல் சென்னையிலே போடப்படவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த யோசனை பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, how much current will each escalator consume ?

The Hon. THIRU P. U. SHANMUGAM : Sorry, Sir, I am not aware of it. The dealled estimates have not yet been prepared.

THIRU G. SWAMINATHAN : Sir, what will happen to the escalators after they are installed when there is current cut ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Naturally, it will stop, Sir.

Hoarding of food and other essential commodities.

*106. Q. THIRU M. SANKARALINGAM (on behalf THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of persons against whom prosecutions were launched from March to June 1974, for hoarding food and other essential commodities in Ramanathapuram district ;

(*b*) the number of persons from whom essential commodities were seized by the Government ; and

(*c*) the manner in which the Government disposed of the food and other essential commodities so seized ?